

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.7.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்னான் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turt) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, த.வேலு, ஜோசப் சாமுவேல், எம்.கே. மோகன், ஆர்.டி.சேகர், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, ஜே.ஜே.எபினேசர், துணை மேயர் மு. மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.ராதாகிருஷ்னான், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் குமார் திர்கி, பொருளாளர் சேகர் ஜெ. மனோகரன், இந்திய ஹாக்கி அணி தேர்வாளர் முகமது ரியாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.7.2023) அண்ணா அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஜெயபாலன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.7.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turf) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, த.வேலு, ஜோசப் சாமுவேல், எம்.கே.மோகன், ஆர்.டி.சேகர், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜே.ஜே. எபினேசர், துணை மேயர் மு.மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் குமார் திர்கி, பொருளாளர் சேகர் ஜெ. மனோகரன், இந்திய ஹாக்கி அணி தேர்வாளர் முகமது ரியாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.7.2023) முகாம் அலுவலகத்தில், கழக துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா நடைபெறவுள்ள கழக இளைஞர் அணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு வழங்குவதற்காக தான் தொகுத்த "அறிவோம் திராவிடம்" என்ற 20 புத்தகங்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கினார். உடன் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உள்ளார்.

### இந்திய நாட்டின் உழைப்பில் பெண்களின் பங்கேற்பு விகிதத்தை மேம்படுத்த

# ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

இந்திய நாட்டின் உழைப்பில் பெண்களின் பங்கேற்பு விகிதத்தை மேம்படுத்த ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன என மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் கேள்வி எழுப்பினார்.



மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் 20.07.2023 அன்று எழுத்துப்பூர்வமாக எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அளித்த பதில்கள் விவரம் வருமாறு:-

கேள்வி: இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் நிலையான உற்பத்தித்திறன், தொழிலாளர் சக்தி பங்கேற்பு விகிதங் களை உயர்த்துதல், குறிப்பாக பெண்கள் மற்றும் வயதான தொழிலாளர்களிடையே, புதிய திறன்களை தக்கவைத்தல் மற்றும் பெறுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறதா;

அப்படியானால், அமைச்சகத்தின் பதில் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் ஒட்டுமொத்த தொழிலாளர் சக்தியில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பின் நிலை காலாண்டு வாரியாக தெரிவிக்கவும்.

நாட்டில் உழைப்பில் பெண்களின் பங்கேற்பு விகிதத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விவரங்கள் என்ன?

இக்கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ராமேஸ்வர் டெலி அளித்துள்ள பதில் வருமாறு:

வேலைவாய்ப்பை மேம்படுத்துவதுடன் வேலைவாய்ப்பை உருவாக்குவதும் அரசின் முன்னுரிமையாகும். நாட்டில் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தை உயர்த்துவதுடன், வேலைவாய்ப்பை உருவாக்கவும் அரசு அவ்வப்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2017-18 ஆம் ஆண்டு முதல் மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் நடத்தப்பட்ட காலமுறை தொழிலாளர் சக்தி கணக்கெடுப்பு (பி.எல்.எஃப்.எஸ்) மூலம் வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை குறித்த தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. கணக்கெடுப்பு காலம் அடுத்த ஆண்டு ஜூலை முதல் ஜூன் வரை ஆகும்.

சமீபத்திய வருடாந்திர பி.எல்.எஃப்.எஸ் அறிக்கைகளின்படி, நாட்டில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்களுக்கான வழக்கமான நிலையில் மதிப்பிடப்பட்ட தொழிலாளர் சக்தி பங்கேற்பு விகிதம் (எல்.எஃப்.பி.ஆர்) 2019-20, 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளில் முறையே 30.0 சதவிகிதம், 32.5 சதவிகிதம் மற்றும் 32.8 சதவிகிதம் ஆகும்.

15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்களுக்கான வழக்கமான நிலையில் மதிப்பிடப்பட்ட தொழிலாளர் மக்கள் தொகை விகிதம் (டபிள்யூபிஆர்) 2019-20, 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளில் முறையே 28.7 சதவிகிதம், 31.4 சதவிகிதம் மற்றும் 31.7 சதவிகிதமாக இருந்தது. இது பெண்களின் வேலைவாய்ப்பில் அதிகரித்து வரும் போக்கைக் காட்டுகிறது. நகர்ப்புறங்களுக்கு மட்டும் காலாண்டு மதிப்பீடுகள் வெளியிடப்படுகின்றன.

தொழிலாளர் சக்தியில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தவும், அவர்களின் வேலைவாய்ப்பின் தரத்தை மேம்படுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பெண் தொழிலாளர்களுக்கு சம வாய்ப்பு மற்றும் இணக்கமான பணிச்சூழலுக்காக தொழிலாளர் சட்டங்களில் பல பாதுகாப்பு ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

சமூகப் பாதுகாப்பு சட்டம், 2020 இல் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பை 12 வாரங்களில் இருந்து 26 வாரங்களாக உயர்த்துதல், 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களில் கட்டாய குழந்தைகள் காப்பக வசதியை ஏற்பாடு செய்தல், போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இரவு ஷிப்டுகளில் பெண் தொழிலாளர்களை அனுமதித்தல் போன்ற விதிகள் உள்ளன.

2020ஆம் ஆண்டின் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் (ஓ.எஸ்.எச்) குறியீட்டில் திறந்தவெளி வேலைகள் உட்பட மேல் மட்டச் சுரங்கங்களில் பெண்களை வேலைக்கு அமர்த்துவதற்கான விதிகள் உள்ளன. மேலும் தரைக்கு அடியில் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை தொழில்நுட்ப, மேற்பார்வை மற்றும் நிர்வாக பணிகளில் தொடர்ச்சியான இருப்பு தேவையில்லை.

ஊதியக் குறியீடு 2019 இல், ஒரு நிறுவனத்திலோ அல்லது அதன் எந்தவொரு அலகிலோ, அதே முதலாளியின் ஊதியம் தொடர்பான விஷயங்களில் பாலின அடிப்படையில், எந்தவொரு ஊழியரும் செய்யும் அதே வேலை அல்லது ஒத்த தன்மை கொண்ட வேலை தொடர்பாக எந்த பாகுபாடும் இருக்கக்கூடாது என்ற விதிகள் உள்ளன.

மேலும், தற்போதைக்கு நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தாலும் அல்லது எந்தவொரு சட்டத்தின் கீழும் தடைசெய்யப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் தவிர, வேலை நிலைமைகளில் ஒரே மாதிரியான வேலை அல்லது வேலைக்கு எந்தவொரு பணியாளரையும் நியமிக்கும் போது எந்தவொரு முதலாளியும் பாலின அடிப்படையில் எந்தப் பாகுபாடும் காட்டக்கூடாது.

பெண் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் வகையில், மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்கள், தேசிய தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மண்டல தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் அவர்களுக்கு அரசு பயிற்சி அளித்து வருகிறது. திறன் மேம்பாடு மற்றும் தொழிற்பயிற்சி மூலம் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக, திறன் இந்தியா இயக்கத்தையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் ராமேஸ்வர் டெலி பதிலளித்துள்ளார்.




விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் இரண்டு வகுப்பறையுடன் கூடிய புதிய பள்ளி கட்டிடத்தினை மாணவர்களை முன்னிலைப்படுத்தி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,மயிலம் வடக்குஒன்றிய செயலாளர் மணிமாறன், ஒன்றிய கவுன்சிலர் ராஜபாரத், ஊராட்சி மன்ற தலைவர்குமுதா ரமேஷ் உள்ளனர்.

### அரிதான நோய்களுக்கு

# சிகிச்சை அளிக்க பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!

நாமக்கல், ஜூலை 30-

டெல்லியில் கோடைக் கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரிடம் அரிதான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நிதி கோரி விண்ணப்பங்களின் விபரம் குறித்து கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களவை உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அரிதான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நிதி கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள், அந்த விண்ணப்பங்களில் அடிப்படையில் மாநில வாரியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் வழங்கப்பட்ட நிதி



யின் விவரங்கள் மற்றும் அளிக்கப்பட்ட சிகிச்சைகளின் விபரம் குறித்து சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவின் பவார், அரிதான நோய்களுக்கான தேசியக் கொள்கையை (என்பிஆர்டி) மார்ச் 30, 2021 முதல் அமலுக்கு வந்தது. இதற்காக 11 சிறப்பு மையங்கள் அடையாளம் காணப்பட்டன. அரிதான நோய் உள்ள நோயாளிகளுக்கு ரூ. 20 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை நிதியுதவி உயர்த்தப்பட்டுள்ளது.

2021-22 ஆம் நிதி ஆண்டில் 22 நோயாளிகளுக்கு ரூ.3 கோடி கர்நாடக உயர் நீதிமன்றப் பதிவேடு மூலமும் புது தில்லி எய்ம்ஸ் மருத்துவமனை நோயாளிக்கு ரூ. 15 லட்சமும் வழங்கப்பட்டது.

2022-23 ஆம் நிதி ஆண்டில் 203 நோயாளிகளுக்கு ரூ. 34.99 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு மையங்களில் பதிவு செய்த உடனேயே நோயாளிகளுக்கான சிகிச்சை தொடங்குகிறது என்றார்.

### கல்லூரி மாணவர்களிடையே தமிழர் மரபு - பெருமிதத்தை உணர்த்தும் வகையில்

# “மாபெரும் தமிழ்க் கனவு” 2-ஆம் கட்ட நிகழ்வுகள் ஆரம்பம்!

## சென்னை பெண்கள் கிறித்துவக் கல்லூரியில் கரு.பழனியப்பன் கருத்துரை!

சென்னை, ஜூலை 30-

கல்லூரி மாணவர்களிடையே தமிழர்களின் மரபையும் தமிழ்ப் பெருமிதத்தையும் உணர்த்தும் வகையில் ‘மாபெரும் தமிழ்க் கனவு’ என்ற பெயரிலான பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வுகள் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளான 03.02.2023 அன்று தொடங்கப்பட்டு 24.04.2023 வரை, தமிழ்நாடு முழுவதும் உள்ள 1,000 கல்லூரிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 1 லட்சம் மாணவர்களைச் சென்றடையும் வண்ணம் 100 இடங்களில் சிறப்பாக நடத்தப்பட்டன. உயர்கல்வித்துறையுடன் தமிழ் இணையக் கல்விக் கழகம் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தியது.

இந்நிகழ்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ‘உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி’, ’தமிழ்ப் பெருமிதம்’ ஆகிய இரு கையேடுகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பரப்புரையின் தொடர்ச்சியாக சென்னை, பெண்கள் கிறித்தவக் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியில் ‘மங்கையராய்ப் பிறப்பதற்கே...’ என்னும் பொருண்மையில்திரைப்பட இயக்குநரான கரு.பழனியப்பன் கருத்துகளை எடுத்துரைத்தார். தமிழ் இணையக் கல்விக் கழக இணை இயக்குநர் ரெ. கோமகன் திட்டத்தின் நோக்கத்தை விளக்கினார். பெண்கள் கிறித்தவக் கல்லூரியின் தமிழ்த் துறை பேராசிரியர் எஸ்தர் அருள் மேரி நன்றியுரை வழங்கினார்.

மேற்கண்ட நிகழ்வில் ஏறத்தாழ 800 மாணவ - மாணவிகள் பங்கேற்றனர்.



ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நேற்று முன்தினம் (28.7.2023) திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், தொப்பம்பட்டி ஊராட்சி, வரப்பாளையம் சமுதாய நலக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமை திட்டம் விண்ணப்பம் பதிவு மையத்தினை ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன் ஆகியோர் உள்ளனர்.